# செங்கோட்டை நகர்மன்றம்

## செங்கோட்டை நகர்மன்றத்தின் சாதரணக் கூட்டம் 16–03–2022

## அன்று மாலை 4.00 மணிக்கு நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்

தலைமை : திருமதி.ஆர்.ராமலட்சுமி நகர்மன்றத் தலைவர் அவர்கள்

முன்னிலை : திரு.சு.நவநீதிக் கிருஷ்ணன் நகர்மன்றத் துணைத் தலைவர் அவர்கள்

முன்னிலை : திரு.ம.இளவரசன் பி.காம்., ஆணையாளர் அவர்கள்

**மன்றப் பொருள் 01 :**

நகராட்சி ஆணையாளர் அவர்களின் பிப்ரவரி 2022–ம் மாதாத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

தீர்மானம் :

பதிவு செய்யப்பட்டது.

**மன்றப் பொருள் 02 :**

செங்கோட்டை நகராட்சியின் 2022–2023 ஆம் ஆண்டுக்கான உத்தேச நிதி நிலை அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

(ந.க.எண் பி1/195/2022)

அலுவலகக் குறிப்பு : 2022–2023 ஆம் ஆண்டு உத்தேச நிதி நிலை அறிக்கையினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

தீர்மானம் :

அங்கீகரித்து அனுமதிக்கப்பட்டது.

**<u>மன்றப் பொருள் 03 :</u>**

பணியாளர் வருங்கால வைப்பு நிதி தொடர்பாக **14–10–2019**ம் தேதியிட்ட உதவி வருங்கால வைப்பு நிதி ஆணையரின் உத்திரவுக்கு எதிராக சென்னை இ.பி.எப் நிருவாக தீர்ப்பாயத்தில் மேல்முறையீட்டு வழக்கு தாக்கல் செய்யும் பொருட்டு மேல்முறையீட்டு வழக்கு கட்டணம் ரூ.**40,000/-** மற்றும் பயணம், உறைவிடம், தட்டச்சு, மற்றும் நீதிமன்ற செலவுகள் ரூ.**20,000/-** மொத்தம் ரூ.**60,000/-** வழக்கறிசர் திரு.எம்.பாண்டியராஜன் –க்கு வழங்கப்பட வேண்டியுள்ளது. மேற்கண்ட வழக்கினை நகராட்சி சார்பில் திரு.பாண்டியராஜன் வழக்கறிஞர் மூலம் நடத்தவும், மேற்படி தொகை வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் :

அனுமதிக்கப்பட்டது.